DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 64/2024** |
| Deposition of Witness for | : PW 8 |
| Name | : மாரியப்பன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 20.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 20th February 2026.

**2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 1ம் எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் சாட்சி தானாக அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் சொக்கம்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணிஓய்வு பெற்றுவிட்டேன். நான் சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது 07.06.2016ம் தேதி 17.40 மணிக்கு சின்னகோவிலான்குளம் காவலர் மாரிமுத்து என்பவர் பதிவு செய்து வைத்திருந்த சின்னகோவிலான்குளம் குற்ற எண்.92/2016 ச/பி.294(பி), 323, 506(1) இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடைச்சட்டம் பிரிவு 4ன் கீழான வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 07.06.2016ம் தேதி 19.00 மணிக்கு சம்பவ இடமான ரெட்டியபட்டியில் வாதியின் வீட்டு முன்பு சென்று சாட்சிகள் முருகன், அய்யனார் ஆகியோர் முன்னிலையில் டார்ச் லைட் மற்றும் தெருவிளக்கு

வெளிச்சத்தில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி பார்வைமகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம். அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. அதன்பிறகு சாட்டசிகள் பூரணம், முத்துராஜ், சண்முகையா, முருகன், அய்யனார் மற்றும் வழக்குபதிவுசெய்த மாரிமுத்து ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். மேற்படி எதிரிகளை குருக்கள்பட்டி, சண்முகநல்லூர், சங்கரன்கோவில் ஆகிய ஊர்களில் தேடி துப்புகள் வைத்திருந்தேன். அதன்பிறகு 31.08.2016ம் தேதி மேற்படி எதிரிகளை தேடிச் சென்றபோது அந்த எதிரிகள் சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றததில் ஆஜராகி பிணையில் விடுவிக்கப்பட்டதாக தெரிந்துகொண்டேன். இத்துடன் எனது முதல்விசாரணையை முடித்து மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் அந்தோணி சவரிமுத்து அவர்களின் பார்வைக்கு வைத்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

முதல் தகவல் அறிக்கையில் 07.06.2016ம் தேதி 13.30 மணிக்கு நான் நிலையப்பொறுப்பில் இருந்தபோது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையிலிருந்து தகவல் கிடைக்கப்பெற்றது என்று அச்சடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 3வது காலத்தில் காவல்நிலையத்திற்கு தகவல்கிடைத்த நாள் மற்றும் நேரமாக 07.06.2016 ம் தேதியும், 17.40 மணியும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நாள் மற்றும் நேரத்தில்தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கை 15 வது காலத்தில் 07.06.2016ம் தேதி அந்த அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் 13.06.2016ம் தேதி கிடைக்கப்பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு காலதாமதமாக அனுப்பப்பட்டதற்கான காரணம் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் கூறிய நாள் நேரத்தில் புகார் வாக்குமூலம் பெறப்பட்டு வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும், அவ்வாறு செய்யப்பட்டிருந்தால் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காது என்றாலும், முதல் தகவல் அறிக்கை பின்யோசனை செய்து தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றாலும் சரியல்ல. நான்

பூரணத்திடம் பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலத்தில் 07.06.2016 ம் தேதியன்று காலை 8 மணிக்கு கிழக்கிலிருந்து தனது வீட்டிற்கு முன்பு வந்ததாக கூறினாரா என்றால் கூறவில்லை. பூரணம் எனது விசாரணையில் எதிரி கோமதி அவரது தலைமுடியை பிடித்து இழுத்ததாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. பூரணம் தனக்கு 3 பற்கள் உடைந்து அதிலிருந்து ரத்தம் வந்ததாக எனது விசாரணையில் கூறினாரா என்றால் இல்லை. பூரணம் எனது விசாரணையில் எதிரி சுப்பிரமணி தனது மகனின் கழுத்தை பிடித்து நெறித்ததாக கூறினாரா என்றால் இல்லை. பூரணம் எனது விசாரணையில் எதிரி சுப்பிரமணி தனது மேல்தாடையில் மிதித்ததாகவும், அதனால் தனக்கு 3 பற்கள் உடைந்ததாகவும் கூறினாரா என்றால் இல்லை. போலீசார் விசாரணையில் பூரணம் எதிரிகள் மூவரும் தனது கணவரை அசிங்கமாக பேசியதாக கூறினாரா என்றால் கூறினார். எதிரிகள் மூவரும் பூரணத்தையும், அவரது கணவரையும் அசிங்கமாக பேசியதாக எனது விசாரணையில் கூறினார். எதிரிகள் மூவரும் பூரணத்தையும், அவரது கணவரையும் அசிங்கமாக பேசவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மூவரும் சேர்ந்து தனது மகனை அடித்ததாக எனது விசாரணையில் பூரணம் கூறினாரா என்றால் இல்லை. எதிரி சுப்பிரமணி தனது மகனை அடித்ததாக கூறினார். எதிரி கோமதி பூரணத்தின் மகளை மிதித்து கீழே தள்ளியதாக பூரணம் எனது விசாரணையில் கூறினாரா என்றால் கூறவில்லை. எதிரிகள் மூவரும் "உன்னால் என்ன செய்யமுடியும் செய்துபார்" என்ற வார்த்தைகளை பூரணத்திடம் சொல்லியதாக பூரணம் எனது விசாரணையில் கூறினாரா என்றால் இல்லை. பூரணம் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் பூரணத்தை அவரது மகன் மற்றும் கணவர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் பூரணம் தனது மகனின் உதவியுடன் மருத்துவமனைக்கு சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சண்முகையா என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் எதிரிகள் மூவரும் காலை 7–8 மணி அளவில் தன் வீட்டிற்கு முன்பு தனது மனைவியை அடித்து பல்லை உடைத்ததாக கூறினாரா என்றால் கூறவில்லை. சண்முகையா என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் தனது மனைவியின் தாடையை எதிரிகள் பிராண்டியதாக கூறினாரா என்றால் கூறவில்லை. சண்முகையா என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் எதிரி சுப்பிரமணி தனது மகனின் சட்டையை கிழித்ததாக கூறினாரா என்றால் இல்லை. சண்முகையா என்னிடம்

அளித்த வாக்குமூலத்தில் தனது மகனின் தோள்பட்டையை சுப்பிரமணி பிராண்டிவிட்டதாக கூறினாரா என்றால் இல்லை. சண்முகையா என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் சம்பவம் நடைபெற்றபிறகு சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் புகார் அளித்துவிட்டு அதன்பிறகு மருத்துவமனைக்கு சென்றதாக கூறினாரா என்றால் இல்லை. முத்துராஜ் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் எதிரிகள மூவரும் தனது அம்மாவை அடித்து வயிற்றில் மிதித்தாக கூறினாரா என்றால் இல்லை. எதிரி வேலுச்சாமி ஓடிவந்து தனது அம்மாவின் அடிவயிற்றில் மிதித்ததாக கூறினார். முத்துராஜ் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் எதிரிகள் மூவரும் தன்னை பொன்னப்பயலே என்று கூறி எதிரி சுப்பிரமணி தன்னை கையாலும், கம்பாலும் அடித்ததாக கூறினாரா என்றால் இல்லை. எதிரி சுப்பிரமணி தன்னை கன்னத்தில் ஓங்கி கையால் அடித்ததாக கூறினார். முத்துராஜ் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் எதிரி சுப்பிரமணி அவரை வலது கன்னத்தில் கடித்ததாகவும், அதனால் பல்தடம் பதிந்ததாகவும் கூறினாரா என்றால் இல்லை. அ.சா.2 சண்முகையா சம்பவம் தொடர்பாக புகார் மனு கொடுத்ததாக எனது விசாரணையில் துலங்குமா என்றால் அவ்வாறு எந்த புகார்மனுவையும் சண்முகையா கொடுக்கவில்லை. நான் முதல்விசாரணையில் கூறிய நாள் மற்றும் நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், புகார் வாக்குமூலம் பூரணத்திடமிரந்து பதிவுசெய்யப்பட்டு அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும், சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், அரசுதரப்புபட்டியல் சாட்சிகளை சரிவர விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றாலும், எனது விசாரணை ஒருதலைபட்சமானது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**